DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அன்பரச பாண்டி |
| Father Name | : | குமரகுரு |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2025.

(3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கற்பகம் நகரில் குடியிருக்கிறேன். நான் குரு வாட்டர் சப்ளை என்ற பெயரில் தொழில் செய்து வந்தேன். எனக்கு அ.சா.2 அர்ச்சுணன் என்பவரை தெரியும். அவர் புதூர் அழகர் நகர் பஸ் ஸ்டாப் குரு சலூன் வைத்துள்ளார். நான் அவருடைய வாடிக்கையாளர் ஆவேன். எனக்கு அ.சா.1 ராமகிருஷ்ணனை தெரியாது. வருடம் எனக்கு ஞாபகமில்லை. இன்றிலிருந்து சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 11 மணியளவில் நான் குரு சலூன் கடையில் இருந்த போது, காயம்பட்டு இருந்த ராமகிருஷ்ணன் என்பவரை என்னுடைய இருசக்கர வாகனத்தில் வைத்து மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். பிறகு என்னை போலிசார் புதூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்கள். எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர்**

**வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015 ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் அ.சா.2 அர்ச்சுணன் சலூன் கடைக்கு நான் முடி வெட்டுவதற்காக சென்றேன் என்றும், ராமகிருஷ்ணன் கட்டிங் முடித்துவிட்டு, சுமார் 11.10 மணியளவில் அவர் நிறுத்தியிருந்த காருக்கு சென்ற சமயம் அவருடைய அலறல் சத்தம் கேட்டு நானும் அ.சா.2 அர்ச்சுணனும் ஓடி போய் பார்த்த போது, ஏற்கனவே கற்பகம் நகரை சேர்ந்த சகாய பிரவீன் என்பவர் கையில் கத்தியுடன் ராமகிருஷ்ணனை வழிமறித்து ஏன்டா தாயோழி மகனே, நாங்களெல்லாம் இங்கே கஸ்டப்படுகிறோம், நீயெல்லாம் சொகுசாவாடா இருக்கிற என்று சத்தம் போட்டு, அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து நீ இத்தோடு செத்து தொலைந்து போடா என்று ராமகிருஷ்ணனின் மார்புக்கு நேராக குத்தினார் என்றும், அவர் கைகளால் தடுக்க, சகாய பிரவீன் ராமகிருஷ்ணனை சரமாறியாக குத்தினார் என்றும், நாங்களும் அருகில் இருந்தவர்களும் ஓடிப்போய் மேற்படி சகாய பிரவீனை பிடிக்க முயற்சி செய்த போது, அவர் கத்தியை சுழற்றிக்கொண்டே யாராவது பிடிக்க வந்தீங்கன்னா, குத்தி கொன்னுபுடுவேன் என்று மிரட்டினார் என்றும், அனைவரும் அங்கிருந்து சிதறி ஓடினார்கள் என்றும், அவர் வடக்கு பக்கமாக கத்தியுடன் சென்றுவிட்டார் என்றும், ராமகிருஷ்ணனின் நண்பரான ஈஸ்வரன் என்பவருக்கு போன் மூலம் அ.சா.2 அர்ச்சுணன் தகவல் சொன்னார் என்றும் என்றும், நானும் அ.சா.2 அர்ச்சுணனும் சகாய பிரவீன் கத்தியால் குத்தியதில் வலது கழுத்து, வலது, இடது கைகள், இடது விலா, இடது மோதிர விரல், வயிற்றில் குத்துக்காயம், இடது கணுக்கால் ஆகிய இடங்களில் காயத்துடன் இருந்த ராமகிருஷ்ணனை தேவதாஸ் மருத்துவமனைக்கு நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று முதலுதவி செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த ஈஸ்வரன் அவருக்கான சிகிச்சைகளை

ஏற்பாடு செய்தார் என்றும், அதன்பிறகு தகவல் தெரிந்து ராமகிருஷ்ணனின் நண்பர் ராஜ்மோகனும் ஈஸ்வரனும் ஸ்கேன் எடுப்பதற்காக தேவதாஸ் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலமாக அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.